**31.12.15**

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென் கடலோர தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு

தென் கடலோர தமிழகத்தில் வியாழக்கிழமை ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: தென்மேற்கு வங்கக் கடல், அதை ஒட்டிய இலங்கையில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, புதன்கிழமை காலை 8.30 மணியளவில் குமரிக் கடல், அதை ஒட்டிய பகுதியில் மேலடுக்குச் சுழற்சியாக நீடிக்கிறது. இந்த நிகழ்வின் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தென் கடலோர தமிழகத்தில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலையைப் பொருத்தவரை, புதன்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், ராமேசுவரம், பாபநாசத்தில் அதிகபட்சமாக 30 மி.மீ மழையும், திருச்செந்தூர், தூத்துக்குடியில் 10 மி.மீ மழையும் பதிவாகியது. தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், வட கிழக்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் எச்சரிக்கையுடன் கடலுக்குள் செல்ல வேண்டும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஒடிஸாவில் வனப் பரப்பு 32% அதிகரிப்பு

ஒடிஸாவில் நடப்பாண்டில் வனப் பரப்பு அதன் மொத்த புவியியல் பரப்பில் 32 சதவீதம் அதிகரித்துள்ளது. இது தேசிய சராசரியான 21.34

சதவீதத்தைக் காட்டிலும் அதிகம் என்று மாநில அரசின் தலைமைச் செயலர் ஏ.பி.பதி தெரிவித்தார். வனத் துறை மேம்பாடு குறித்த உயர்நிலைக் கூட்டம் புவனேசுவரத்தில் பதி தலைமையில் புதன்கிழமை நடந்தது. கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்கண்ட தகவலை வெளியிட்டார். "அமா' வன மேம்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும், சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாப்பதற்கும் பீடி சுற்றும் இலை சாகுபடியை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல்-சுற்றுலா நிர்வாகத்துக்கும் முக்கியத்துவம் தருமாறு வனத் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

**வேளாண் இணை இயக்குநர் பொறுப்பேற்பு**

மதுரை மாவட்ட வேளாண் இணை இயக்குநராக சே. கனகராஜ் புதன்கிழமை பொறுப்பேற்றார். நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைத் திட்ட அலுவலர் மற்றும் வேளாண் துணை இயக்குநராகப் பணியில் இருந்த இவர், பதவி உயர்வு பெற்று இணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு, வேளாண் இணை இயக்குநராக இருந்த ஜெய்சிங் ஞானதுரை ஓய்வுபெற்றார். அதைத் தொடர்ந்து, துணை இயக்குநரான சாரநாத்பாபு, இணை இயக்குநர் பொறுப்பில் இருந்தார்.

**விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்க பயிற்சி**

பிள்ளையார்பட்டி பஞ்சாப் நேஷனல் வங்கி உழவர் பயிற்சி மையத்தில் அசோலா மண்புழு உரம் மற்றும் பஞ்ச காவிய தயாரிப்பு பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது. இப்பயிற்சியை மைய இயக்குநர் குறிஞ்சிநாதன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். பயிற்றுநர் சேவுகப்பெருமாள் விவசாயிகளுக்கு செயல் விளக்கத்துடன் பயிற்சி அளித்தார். தொடர்ந்து விவசாயிகளின் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் பதில் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் சிவகங்கை,

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளின் விதை தேவையை பூர்த்தி செய்ய மாவட்டத்தில் நெல், பயறு, நிலக்கடலை விதைப் பண்ணைகள்: வேளாண்மை இணை இயக்குநர் இரா.குருமூர்த்தி தகவல்**

சிவகங்கை மாவட்ட விவசாயிகளின் விதை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், நெல், பயறு மற்றும் நிலக்கடலை விதைப் பண்ணைகள் 382 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இரா. குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்ட வேளாண்மைத் துறை செயல்படுத்தி வரும் திட்டங்களை பார்வையிடுவதற்காக, செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அதில், மாவட்ட நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின் மூலம், மானாகுடி கிராமத்தில் சரோஜா என்பவரது பண்ணைக் குட்டை பார்வையிடப்பட்டது. பயனாளிக்கு 90 சதவீத மானியத்தில் ரூ.56 ஆயிரம் மதிப்பில் பண்ணைக் குட்டை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இதில், 80 சதவீத மானியத்தில் 2 ஆயிரம் மீன்குஞ்சுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், வருவாய் உயர்ந்திருப்பதாகவும், பயனாளி சரோஜா தெரிவித்தார்.

தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பு சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நடைபெறுகிறது. நேரடி நெல் விதைப்பால் பயிர்களை பராமரிக்க முடியாமல் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க, 5,820 ஹெக்டேர் பரப்பளவுக்கு ரூ.2.91 கோடியில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, ஹெக்டருக்கு ரூ.5 ஆயிரம்

மானியமும் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், சிவகங்கை அருகே சோழபுரம் கிராமத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளதையும் பார்வையிட்டனர்.

அதன்பின்னர், அய்யம்பட்டி கிராமத்தில் சகாதேவன் என்ற விவசாயி அமைத்துள்ள ஏடிடி-49 மற்றும் ஜோதி ரகங்களின் நெல் சான்று விதைப் பண்ணையையும் பார்வையிட்டனர்.

சிவகங்கை மாவட்ட விவசாயிகளின் விதை தேவைகளைப் பூர்த்தி செய்திட, 330 ஹெக்டேர் பரப்பளவில் நெல் விதைப் பண்ணையும், 26 ஹெக்டேர் பரப்பளவில் பயறும், 26 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை விதைப் பண்ணையும் அமைக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இரா. குருமூர்த்தி தெரிவித்தார்.

செய்தியாளர் பயணத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) இரா. சுதர்சன், வேளாண்மை துணை இயக்குநர்கள் எஸ். அழகப்பன், இரா. மணிவண்ணன், வேளாண்மை உதவி இயக்குநர்(தரக் கட்டுப்பாடு) பழ. கதிரேசன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

***கீழ்பவானி முறைநீர் பாசன சபை கூட்டம்***

கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபை பகிர்மான கமிட்டி சார்பில் உலக விவசாயிகள் தினம் மற்றும் செயற்குழுக் கூட்டம் கவுந்தப்பாடியில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு பாசன சபைத் தலைவர் லோகநாதன் தலைமை வகித்தார். இதில், கீழ்பவானி பாசனத் திட்டத்தில் இரட்டை படை பாசனப் பகுதிகளுக்கு, 2016 ஜனவரி 10-ஆம் தேதி முதல் ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி வரை அணையில் உள்ள நீரின் இருப்பை கணக்கில் கொண்டு முறை வைத்து தண்ணீர் திறக்க வேண்டும்.

கீழ்பவானி பாசனப் பகுதிகளில் நெல் அறுவடை துவங்கவுள்ள நிலையில், பாசன பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் சூரிய சக்தி மூலம் இயங்கும் உலர்ப்பான்கள் :மாவட்ட ஆட்சியர் தகவல்**

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை சார்பில் 50 சதவிகித மானியத்தில் சூரிய சக்தியில் இயங்கும் உலப்பான்கள் வழங்கப்படுகின்றது என மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளது,

வேளாண் விளை பொருட்களை சூரிய சக்தி உலர்ப்பான்கள் மூலம் உலர்த்தி, அதனை மதிப்புக்கூட்டும் பொருட்களாக மாற்றி விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறும் வகையில், வேளாண் பொறியியல் துறை மூலம் தமிழக அரசு சூரிய சக்தியில் இயங்கும் உலர்ப்பான்களை வழங்க உத்தரவிட்டுள்ளது.

இவற்றில் வெளியிலிருந்து காற்று, தூசு படியாத வகையில் பாலிகார் போனேட் தகடுகள் மூலம் மூடப்பட்டு, தரையில் கான்கிரீட் மற்றும் கடப்பா கற்கள் பதிக்கப்படுகிறது. தேவைக்கு ஏற்ப உட்பகுதியில் வெப்பத்தை நிலைப்படுத்தவும், அதிகமான வெப்பத்தை வெளியேற்றவும் சூரிய சக்தியில் சென்சார் மூலம் இயங்கக்கூடிய 3 மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளது.

இத்தகைய உலர்ப்பான்கள் மூலம் காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, மிளகாய், வாசனைப்பொருட்கள், மூலிகைப் பொருட்கள் என அனைத்து

உணவுப் பொருட்களையும் மிகவும் சுகாதார முறையில், உணவுப் பொருட்களில் உள்ள உயிர்சத்துகள் வீணாகாமல் உலர்த்தி மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றலாம்.

இத்திட்டத்தில் உத்தேசமாக 400 சதுர அடி அளவுள்ள உலர்ப்பான்கள் அமைக்க ரூ.3.68 லட்சம் என்று மதிப்பிடப்பட்டு, அதிகபட்சமாக ரூ.1.84 லட்சம் அல்லது 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட விவசாயிகள் அல்லது சங்க விதியின்கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் குழுக்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விண்ணப்பிக்கலாம்.

விருப்பமுள்ளோர் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், ஸ்ரீரங்கம், மணப்பாறை, வையம்பட்டி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் அல்லது விவசாய குழுக்கள், திருச்சி ஜெயில்கார்னர் பகுதியில்

எண்-2, செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலும், திருச்சி-20 என்ற முகவரியிலும், முசிறி, தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, துறையூர், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள், எண்-18 கண்ணதாசன் தெரு, முசிறி என்ற முகவரியிலுள்ள உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலும், இலால்குடி, புள்ளம்பாடி மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் லூர்து இல்லம், 8வது குறுக்கு தெரு, காமராஜர் நகர் தெற்கு, லால்குடி என்ற முகவரியிலுள்ள உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலும், தங்களது பெயர்களை பதிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் பயன் பெறலாம் என தெரிவித்துள்ளார்.

"பாரம்பரிய சிறு தானியங்கள் ஊட்டச்சத்துகளின் குவியல்'

விவசாயிகள் மீட்டெடுத்துள்ள பாரம்பரிய சிறு தானியங்கள் அனைத்தும் ஊட்டச்சத்துகளின் குவியல்கள் என்றார் ஆட்சியர் சு. கணேஷ்.

இயற்கை விவசாயியான ஜி.எஸ். தனபதி பாரதிபுரம் கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டுள்ள சிறுதானியப் பயிர்களை செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்ட ஆட்சியர் மேலும் கூறியதாவது:

குதிரைவாலி, வரகு, கேழ்வரகு, சோளம், கம்பு, சாமை, தினை போன்ற சிறு தானியங்களை சிறப்புத் திட்டம் மூலம் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும். தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்படும் அரிசி,கோதுமையில் உள்ள புரதச்சத்து, தாது உப்புகள்,வைட்டமின் சத்துக்கள் 3 முதல் 5 மடங்கு அதிகமாக சிறு தானியங்களில் உள்ளன.

மேலும், தற்போது நிலவும் உணவுப் பற்றாக்குறை, புவி வெப்பமடைதல், விளைநிலங்கள் வறண்டு போய் விடுதல் ஆகியவற்றை சமாளிக்கக்கூடிய சரியான மாற்றுப் பயிர்கள் சிறு தானியங்கள் என்றார் ஆட்சியர். விவசாயி ஜி.எஸ். தனபதி கூறியதாவது: பாரம்பரிய முறைகளில் விளைவிக்கப்படுவதால், சிறு தானியங்களை பூச்சிகள் தாக்குவதில்லை. பெரும்பாலும் சிறு தானியங்கள் பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றுடன் இணைந்தே பயிரிடப்படுகின்றன. பெருமளவில் உள்ள மானாவாரி நிலங்களில் பயிரிட சிறுதானியங்கள் மிகவும் ஏற்றது. இன்றைய இளம் தலைமுறையினரின் துரித உணவுக் கலாச்சாரம் தான் பல்வேறு நோய்களுக்கு ஆதாரமாகவும் மாறிவிட்டது. எனவே,சிறு தானியங்கள்தான் உடல் ஆரோக்கியத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் அருமருந்தாகத் திகழ்கிறது என்றார்.

இதில், புதுகை வேளாண் துணை இயக்குநர் த. சந்திரசேகரன், புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குநர்கள் ஏ. ஆதப்பன், ஜீவானந்தம், சி. அப்பாவு பாலாண்டார், மூட்டாம்பட்டி

ஊராட்சித் தலைவர் எஸ் கோவிந்தராசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"தஞ்சாவூர் மாவட்டத்தில் 512 ஏரிகள் நிரம்பின'**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள 512 ஏரிகளில் முழுமையாகத் தண்ணீர் நிரம்பியுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அவர் பேசியது:

மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் 561 ஏரிகள் உள்ளன. இவற்றில் வடகிழக்குப் பருவமழை மூலம் 512 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. 31 ஏரிகளில் 75%, 14 ஏரிகளில் 50% நீர் நிரம்பியுள்ளது.

மேலும், டெல்டா பாசனப் பகுதியின் நீர்த் தேவையைக் கணக்கில் கொண்டு மேட்டூர் அணையிலிருந்து டிச. 23-ம் தேதி முதல் மீண்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, நீர் பங்கீடு செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய் கோட்ட கட்டுப்பாட்டில் 526 ஏரிகள் உள்ளன. இவற்றில் 98 ஏரிகளில் முழுமையான அளவில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

மேலும் 268 ஏரிகளில் எல்லைகள் நில அளவீடு செய்யப்பட வேண்டும். 64 ஏரிகளில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும். 96 ஏரிகளில் எல்லைக் கற்கள் நடப்பட வேண்டும். வெண்ணாறு கோட்டத்தில் 3 ஏரிகளில் ஆக்கிரமிப்பு அகற்ற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

**ஜன. 7-ல் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம்**

பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஜன. 7 ஆம் தேதி முதல் வியாழக்கிழமைதோறும் பருத்தி ஏலம் நடைபெறும் .

, நிகழாண்டு பருத்தி ஏல விற்பனை ஜன. 7 ஆம் தேதி தொடங்குகிறது.

நிகழாண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்திக்கான அறுவடை தொடங்கியுள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது பருத்தியை பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வந்து விற்றுப் பயன் பெறலாம்.

இந்த ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட பருத்தியை 8 சதவீதம் ஈரப்பதத்துக்கு குறைவாக இருக்கும் வகையில், நிழலில் நன்கு உலர்த்திக் கொண்டு வர வேண்டும். கிராமப்புறங்களில், தனியாரிடம் விற்கும்போது எடையில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்த்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சரியான எடையும், மறைமுக ஏலத்தில் போட்டி மூலம் அதிக விலையும் பெறலாம்.

**"இயற்கை வேளாண்மை கொள்கையை உருவாக்க வேண்டும்'**

மத்திய, மாநில அரசுகள் இயற்கை வேளாண்மை கொள்கையை உருவாக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர். பாண்டியன் வெளியிட்ட அறிக்கை:

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் 2-ஆம் ஆண்டு நினைவு தினம் உலகம் முழுவதும் இயற்கையை நேசிக்கின்ற ஆர்வலர்களாலும்,

விவசாயிகளாலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இன்று உலகம் முழுவதும் உணவே நஞ்சாகிவிட்டது. நஞ்சிலா உணவை உற்பத்தி செய்யவேண்டுமெனில் பாரம்பரிய விவசாய முறையையும், மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய நெல் ரகங்களையும் பாதுகாத்திட வேண்டும். செயற்கை உரங்களைத் தவிர்த்து, இயற்கை உரங்களைப் பயன்படுத்தி சிறந்த உணவு உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் மண்வளத்தையும் மேம்படுத்தி மக்களையும் பாதுகாக்க முடியும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த அரும்பாடுபட்டவர் நம்மாழ்வார். எதிர்பாராதவிதமாக அவரது மரணம் நிகழ்ந்துவிட்டது.

நம்மாழ்வாரின் வழியை பின்பற்றி இந்தியா முழுமையிலும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இயற்கை விவசாயத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மண்வளத்தையும் மக்களுக்கு தற்போதைய உணவு உற்பத்தி முறைகளில் ஏற்பட்டுள்ள அச்சத்தையும் போக்குவது அரசின் கடைமையாகும்.

எனவே, இயற்கை விவசாயத்தை சட்டமாக்கி மத்திய, மாநில அரசுகள் அதற்கான கொள்கை முடிவையும் அறிவித்திட வேண்டும். நம்மாழ்வாரால் உருவாக்கப்பட்ட கரூர் மாவட்டம், கடம்பூர் கிராமத்தில் வானகம் என்ற இயற்கை வேளாண் பண்ணையை தமிழக அரசு ஆராய்ச்சி மையமாக அறிவித்து அதனை அரசே செயல்படுத்திட வேண்டும்.

மேலும், அவரது நினைவைப் போற்றும் வகையில் அவர் பிறந்த தஞ்சையில் மணிமண்டபம் கட்ட வேண்டும். இந்தக் கோரிக்கைக்காக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு மற்றும் தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தின் மூலம் தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கவுள்ளோம், இவ்வாறு பாண்டியன் கூறியுள்ளார்.

**விவசாயிகளுக்கு ரூ.23.42 லட்சத்தில் விசை உழுவை இயந்திரம்: ஆட்சியர்வழங்கினார்**

வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின் மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு விசை உழுவை இயந்திரங்கள் புதன்கிழமை வழங்கப்பட்டன.

வேளாண்மைத் துறையின் மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விசை உழுவை இயந்திரங்களும், தோட்டக்கலைத்துறை மூலம் தோட்டக்கலை இயந்திர மயமாக்குதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியத்தில் மினி டிராக்டர், விசை உழுவை இயந்திரம், ரோட்டரி உழுவை இயந்திரம் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, நாகர்கோவிலில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு ரூ.23,42,500 மதிப்பிலான விசை உழுவைஇயந்திரங்களை ஆட்சியர் சஜ்ஜன் சிங் ரா. சவாண் வழங்கினார்.

அகஸ்தீசுவரம் வட்டாரம் பொன்முடி, விமலா, சுகிர்தாபாய், ராஜாக்கமங்கலம் வட்டாரம் பெருமாள், ஆலிஸ்மேரி பிரேமா, தோவாளை வட்டாரம் முத்துராஜ், காமராஜ், குளத்தூரான்பிள்ளை, குருந்தன்கோடு வட்டாரம் சுந்தரமணி, தர்மராஜ், முஞ்சிறையைச் சேர்ந்த செல்வராஜ் ஆகிய 11 விவசாயிகளுக்கு ரூ.8,21,500 மானியத்துடன் ரூ. 17,74,075 மதிப்பில் விசை உழுவை இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

மேலும், தோட்டக்கலை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் மார்த்தாண்டம் டி.கில்டா ஜெபமதிக்கு ரூ.75,000 மானியத்துடன் ரூ.3,30,750 மதிப்பிலான மினி டிராக்டர், லீபுரம் என்.ஆறுமுகம்பிள்ளைக்கு ரூ.40,000 மானியத்தில் ரூ.1,61,175 மதிப்பிலான விசை உழுவை இயந்திரம், நாகர்கோவில் மங்கள

அந்தோணி சுரேந்திரா, தக்கலை ஷாகுல் ஹமீது, அருமனை பிரீதா ஞானகுமாரி ஆகியோருக்கு ரூ.30,600 மானியத்துடன் ரூ. 76,500 மதிப்பிலான ரோட்டரி உழுவை இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், வேளாண் இணை இயக்குநர் இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிஜாமுதீன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சிவகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**குமரியில் அணைகளுக்கு நீர்வரத்து நீடிப்பு**

குமரி மாவட்டத்தில் மழையின் தீவிரம் தணிந்த நிலையிலும், அணைகளுக்கு மிதமான அளவில் நீர்வரத்து நீடித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் தற்போது அதிக வெயிலோ, மழையோ இல்லாமல் மிதமான சீதோஷ்ணம் நிலவுகிறது. அதேவேளையில், அணைகளுக்கு குறைந்த அளவில் தண்ணீரும் வந்துகொண்டிருக்கிறது.

பேச்சிப்பாறை அணைக்கு புதன்கிழமை விநாடிக்கு 443 கன அடி நீர்வரத்து இருந்தது. இதில் பெரும் பகுதி தண்ணீர் கோதையாறு மின் நிலையங்களிலிருந்து வருவதாகும். பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 177 கன அடி தண்ணீரும், சிற்றாறு 1 அணைக்கு விநாடிக்கு 151 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

அணைகளில் நீர்மட்டம்: பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 45.85 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 511 கன அடி தண்ணீர் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டிருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 74.88 அடியாக இருந்தது. இந்த அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டிருந்தது.

சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 15.91 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 200 கன அடி தண்ணீர் பாசனத்திற்காக திறந்துவிடப்பட்டிருந்தது. சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 16 அடியாக இருந்தது. பொய்கை அணையின் நீர்மட்டம் 28.80 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது.

திற்பரப்பில் உற்சாகம்: திற்பரப்பு அருவியில் தற்போது தண்ணீரின் வேகம் தணிந்து மிதமாக கொட்டுகிறது. இதனால், இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்கின்றனர்.

**அண்ணாமலைப் பல்கலை.யில் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம்**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புலத்தில் உழவியல்துறை பேராசிரியர் ராம.கதிரேசனால் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் பங்கேற்போர் விளை நிலங்களில், சிறு வேளாண் மகளிரின் உணவு பல்வகைப்படுத்தல் மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த பண்ணைய மாதிரிகள் வடிவமைத்தல் ஆய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் சாத்தமங்கலம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் செ.மணியன் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆடுகளை இலவசமாக வழங்கினார். பின்னர், சக்திவிளாகம் கிராமத்தில் நெற்பயிரில் மீன் வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புகள் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதை துணைவேந்தர் பார்வையிட்டு அத்தகைய நெல் வயல்களில் மீன் குஞ்சுகளை துணைவேந்தர் செ.மணியன் விடுவித்தார்.

பின்னர், முடிகண்டநல்லூர் கிராமத்தில் ஆய்வுத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள கோழி மற்றும் மீன் இறைச்சி விற்பனைக் கூடத்தை துணைவேந்தர் செ.மணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் ராம.கதிரேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**செல்லிப்பட்டு தடுப்பணை சீரமைக்கும் பணி துவக்கம்**

விவசாயிகளின் புகார் எதிரொலியாக 100 ஆண்டுகள் பழமையான செல்லிப்பட்டு தடுப்பணை சீரமைக்கும் பணி துவங்கியுள்ளது.

புதுச்சேரி அருகே செல்லிப்பட்டு கிராமத்தில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே 1916-ஆம் ஆண்டு பிரெஞ்சு ஆட்சி காலத்தில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இந்த தடுப்பணையில் நீர் தேக்கப்பட்டு சுற்றியுள்ள 50 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த மாதம் பெய்த கன மழை காரணமாக செல்லிப்பட்டு தடுப்பணை நிரம்பி வழிகிறது. இந்த தடுப்பணையின் நடுப்பகுதி உடைந்துள்ளது. மேலும் அங்கு கொட்டப்பட்ட கருங்கற்களும் அடித்து செல்லப்பட்டுள்ளன. இதனால் அணை முற்றிலும் உடையும் அபாயம் இருந்தது. இது குறித்து அண்மையில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

இதன் எதிரொலியாக, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் சாமிநாதன் உத்தரவின் பேரில் பொதுப்பணித் துறையினர் மற்றும் ஒப்பந்ததாரர் பொக்லைன் இயந்திரம் மூலம் உடைந்த இடங்களில் கருங்கற்களைக் கொண்டு நிரப்பி சமப்படுத்தும் பணியை தொடங்கி உள்ளனர்.

அணையை பலப்படுத்தும் பணியும் நடந்து வருகிறது. இதனால் விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**50 ஆயிரம் டன் நெல் கொள்முதலுக்கு... 50 நிலையங்கள்: நுகர்பொருள் வாணிப கழகம் முடிவு**

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில், 50 இடங்களில், நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க, திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்மூலம், 50 ஆயிரம் டன் நெல்லை, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பருவ மழை பொய்த்ததால், விவசாயம் படிப்படியாக குறைந்து வந்தது. ஏரிகள் அனைத்தும் வறண்டு, நிலத்தடி நீர் மட்டம் அதலபாதாளத்திற்கு சென்றது.

வடகிழக்கு பருவமழை:ஆழ்துளை கிணறுகளை நம்பியிருந்த விவசாயிகளும், எதிர்பார்த்த அளவு தண்ணீர் கிடைக்காமல், ஏமாற்றம் அடைந்தனர். ஏரிப் பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகள், விவசாயம் செய்ய முடியாமல், மாற்று வேலைகளை தேடி சென்றனர்.இந்த நிலையில், வடகிழக்கு பருவமழை, வழக்கத்தை விட அதிகமாக பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து, நெல் விதைத்துள்ளனர்.

தண்ணீர் இல்லை:கடந்த ஆண்டு போதிய அளவு விவசாயம் இல்லாததால், மாவட்டத்தில், 20 இடங்களில் மட்டும், நுகர்பொருள் வாணிப கழகத்தின் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டன.நடப்பாண்டு, விவசாயத்திற்கு தேவையான தண்ணீர்

கிடைத்துள்ளதால், விவசாயிகள் மூன்று போகம் விவசாயம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

இதையடுத்து, நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில், மாவட்டத்தில், அதிகளவில் நெல் உற்பத்தியாகும், 50 இடங்களில், தற்காலிக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்து, 100 கிலோ எடை கொண்ட, மோட்டா ரக நெல் 1,460 ரூபாய்க்கும்; சன்ன ரக நெல் 1,520 ரூபாய்க்கும் கொள்முதல் செய்ய உள்ளனர்.

நுகர்பொருள் வாணிப கழகம் நிர்ணயித்துள்ள இந்த விலை, தனியாரை விட கூடுதலாகும். நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

கூடுதல் மழை :பல ஆண்டுகளாக, விவசாயம் நடைபெறாததால், நுகர்பொருள் வாணிப கழகத்தால், 2013-14ல், 5,000 டன் நெல்லும்; 2014-15ல், 20 ஆயிரம் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது, கூடுதலாக மழை பெய்துள்ளதால், விவசாயிகளிடமிருந்து, 50 ஆயிரம் டன் நெல்லை, கொள்முதல் செய்ய, இலக்கு நிர்ணயித்து உள்ளனர்.

இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட நுகர்பொருள் வாணிப கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சில ஆண்டுகளாக, விவசாயம் பாதித்திருந்ததால், குறைந்த அளவில் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டன. நடப்பாண்டு தண்ணீர் கிடைத்துள்ளதால், 50 இடங்களில், தற்காலிக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

பிப்ரவரி மாதம்:அதற்கான அறிக்கையை ஆட்சியர் அனுமதிக்காக அனுப்பியுள்ளோம். அனுமதி கிடைத்ததும், பிப்ரவரி மாதம் அந்தந்த பகுதிகளில், நெல் கொள்முதல் நிலையம் அமைத்து, கடந்த ஆண்டை விட கூடுதல் விலை கொடுத்து, விவசாயிகளிடமிருந்து நெல் பெறப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 22 நாட்களில் 55 ஆயிரம் டன் கரும்பு அரவை

திருத்தணி:கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 22 நாட்களில், 55 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது.திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. ஒரு மாதமாக பெய்த கன மழையால் இந்தாண்டின் அரவை பருவம், அக்., 7ம் தேதி துவங்க வேண்டியது, ஆனால், இம்மாதம், 7ம் தேதி கரும்பு அரவை துவங்கியது.

இரு மாதங்களுக்கு பின் துவங்கிய கரும்பு அரவை தினசரி, 2,400 டன் கரும்பு அரவை

செய்யப்படுகிறது. நடப்பாண்டில், 2.75 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய ஆலை நிர்வாகம்

திட்டமிட்டிருந்தது.இதுகுறித்து, ஆலையின் மேலாண்மை இயக்குனர் மலர்விழி கூறுகையில், 'நடப்பாண்டில் மழையால் கரும்பு அரவை காலதாமதமாக துவங்கிஉள்ளது. இருப்பினும், 22 நாட்களில், 55 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்துள்ளோம். நிர்ணயித்த இலக்கை எட்ட முயற்சி செய்வோம்' என்றார்.

## 4 இடங்களில் மஞ்சள் ஏலம்: நேரம் நிர்ணயித்து நடவடிக்கை

ஈரோடு: ஈரோட்டில், டி.ஆர்.ஓ., சதீஷ் தலைமையில் நடந்த வேளாண் குறைதீர் கூட்டத்தில், கருமாண்டி செல்லிப்பாளையத்தில், வரும், ஜன., 4

முதல் செயல்பட உள்ள ஒருங்கிணைந்த மஞ்சள் வளாகம் குறித்த பிரச்னை எழுப்பப்பட்டது.

அப்போது நடந்த விவாதம் வருமாறு:
தமிழக விவசாயிகள் சங்க தலைவர் பெரியசாமி: 'ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம், கருங்கல்பாளையத்தில் நடத்தப்படும் மஞ்சள் ஏலம், வரும், ஜன., 4ம் தேதி முதல் கருமாண்டி செல்லிப்பாளையத்தில் உள்ள ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தில் நடக்கும்' என, அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, பெருந்துறை அருகே கருமாண்டி செல்லிபாளையத்தில் ஏலம் நடக்கும்போது, விவசாயிகள், வியாபாரிகள், மாவட்டத்தில் உள்ள மற்ற நான்கு இடங்களுக்கு செல்வதில் சிக்கல் ஏற்படும். புதிய இடத்தில் எவ்வாறு ஏலம் நடத்தப்படும். விவசாயிகளின் மஞ்சளை எங்கு இருப்பு வைப்பார்கள் என்பது குறித்து விவசாயிகள், வியாபாரிகள், அதிகாரிகள் பங்கேற்ற முத்தரப்பு கூட்டம் நடத்த வேண்டும். அதில் கருத்துக்கள் கேட்டு, அதில் எழும் பிரச்னைக்கு தீர்வு கண்டபின், கருமாண்டி செல்லிபாளையத்தில் ஏலத்தை துவக்க வேண்டும். தவிர, கருமாண்டி செல்லிபாளையத்தில் உள்ள ஏல மையம் மற்றும் குடோனில், ஏராளமான மூட்டை தூக்கும் தொழிலாளிகள் பணி செய்து வருகின்றனர். தற்போது, கருமாண்டி செல்லிபாளையத்துக்கு ஏலமும், குடோனும் மாற்றப்பட்டால், இவர்கள் வாழ்க்கை கேள்விக்குறியாகும். இவர்களுக்கு தீர்வு காண வேண்டும்.

கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) விசுவநாதன்: அரசு உத்தரவுப்படி, கருமாண்டி செல்லிபாளையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. நான்கு இடங்களில் ஒரே நேரத்தில் மஞ்சள் ஏலம் நடக்காது. ஒவ்வொரு மையத்துக்கும், காலை, 10, 11, மதியம், 12, 2 மணி என நேரம் நிர்ணயம் செய்து, மாவட்ட நிர்வாகம் மூலம் முறையாக அறிவிக்கப்படும். விவசாயிகள், வியாபாரிகள் சென்று பயன்பெறும் வகையில், ஏல நேரம்

மாற்றி அமைக்கப்படும். மூட்டை தூக்கும் தொழிலாளிகள் பிரச்னை குறித்து, பேசி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏலம் நடக்கத்துவங்கும்போது, ஏற்படும் பிற பிரச்னைகளும் அவ்வப்போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். திட்டமிட்டபடி, ஜன., 4ம் தேதி கருமாண்டி செல்லிபாளையத்தில் மஞ்சள் ஏலம் துவங்கும். இவ்வாறு அவர்கள் பேசினர்.

**நெல் அறுவடை துவக்கம்**

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணை பகுதியில், கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கால்வாயின் ஒற்றைபடை மதகுகள் மற்றும் சென்னாசமுத்திர கால்வாய் பகுதியில் இரட்டைபடை மதகுகள் பகுதியும் பயன்பெற்றது. தண்ணீர் திறந்த ஒரு மாதம் கழித்து நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் மூன்று மாதங்கள் நிறைவடைந்தவுடன் தற்போது அறுவடைக்கு தயாரானது. நெற்பயிர் அறுவடை இயந்திரங்கள் ஆத்தூர், தர்மபுரி பகுதியில் இருந்து நெற்பயிர் அறுவடை இயந்திரங் கள் இன்னும் வராத காரணத்தால், தற்போது விவசாயிகள் ஆட்கள் மூலம் அறுவடை பணியை துவங்கியுள்ளனர்.

**கிழங்கு விதைகளை வைக்க குளிர்பதன கிடங்கு அவசியம்**

ஊட்டி: 'உருளைக் கிழங்கு விதைகளை சேகரித்து வைக்க, குளிர்பதன கிடங்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டது.

ஊட்டி அருகேயுள்ள முத்தோரை மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில், 'ஜெய் கிசான், ஜெய் விக்யான்' வாரம் கொண்டாடப்பட்டது. மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்து பேசுகையில்,“விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கையாள வேண்டும்,” என்றார்.

பின், உருளைக் கிழங்கு உற்பத்தியில் பண்ணை கருவிகளின் பயன்பாடு, விதைக் கிழங்கை விதை நேர்த்தி செய்தல், செயற்கை முறையில் விதைக் கிழங்கை முளைக்க வைத்தல் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. உருளைக்கிழங்கு ஆராய்ச்சி மையத்தின் புதிய தொழில்நுட்பங்களை முதன் முதலில் செயல்படுத்தி, பிற விவசாயிகளுக்கு முன்னோடிகளாக விளங்கிய கல்லக்கொரையைச் சேர்ந்த திப்பன், அஜ்ஜூரைச் சேர்ந்த பாலகிருஷ்ணன், சோலாடவைச் சேர்ந்த செல்வக்குமார் ஆகியோருக்கு முன்னோடி விவசாயிகளுக்கான விருது வழங்கப்பட்டது.விவசாயிகள் தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர்.

விவசாயிகள் சிலர் கூறுகையில்,'விதை கிழங்கை நேரடியாக வழங்க வேண்டும். உருளைக் கிழங்கு விதைகளை சேமித்து வைக்க, குளிர்பதன கிடங்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்' என்றனர். நிகழ்ச்சியில், விஞ்ஞானிகள் சுதா, ஆரத்தி பைரவா, திவ்யா உட்பட அஜ்ஜூர், சோலாடா, கல்லக்கொரை, கக்குச்சி மற்றும் அப்புக்கோடு கிராமங்களை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## திண்டுக்கல்லில் 1.05 லட்சம் எக்டேரில் பயிர் சாகுபடி

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 653 எக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக பெய்த மழையால் விவசாயிகள் பணிகளை துவங்கி, வேகமாக நடந்து வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான உரங்களும் தட்டுப்பாடின்றி போதுமான அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் அந்தந்த வட்டாரங்களில் கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், வேளாண் உதவி அ<லுவலர்கள் மூலம் பயிர் சாகுபடி குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

இதன்படி சென்ற மாதம் எடுத்த கணக்கெடுப்பில், மாவட்டம் முழுவதும் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 653 எக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் நெல் 6942 எக்டேர், சோளம் 35159, கம்பு 771, ராகி 10, மக்கா சோளம் 23736, துவரை 1326, பச்சைபயறு 2218, உளுந்து 7259, நிலக்கடலை 6781, எள் 614, பருத்தி 4361, கரும்பு 2316 , கொள்ளு 2830,திணை 6, வரகு 5 , சாமை 16, கொண்டை கடலை 167,சூரியகாந்தி 126, ஆமணக்கு 32, இதர பயிர்கள் 10951 ஏக்டேரில் பயிர்கள் சாகுபடியாகின என, வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார், துணை இயக்குனர் தங்கசாமி கூறினர்.

**விவசாயிகளுக்கு ரூ.2 கோடி கடன்**

தேனி:தேனி சிண்டிகேட் வங்கியின் மதுரை மண்டலம் சார்பில் உழவர் தினவிழா நடந்தது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

மண்டல உதவி பொது மேலாளர் மணிவண்ணன் வரவேற்றார். துணை பொது மேலாளர் ராஜேஸ்வரி, மாவட்ட வளர்ச்சி மேலாளர் வெங்கட்ரமணா, சென்டெக்ட் விஞ்ஞானி மாரிமுத்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர். பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஆல்பர்ட், வங்கியின் மதுரை மண்டல வேளாண் அதிகாரி ராமசாமி விவசாய கடன் திட்டங்கள் பற்றி பேசினர். 70 விவசாயிகளுக்கு ரூ.2 கோடி விவசாய கடன் வழங்கப்பட்டது.

வட்ட அளவில் சிறந்த வாடிக்கையாளர்களில், சிறந்த 10 விவசாயிகளுக்கு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது. தேனி கிளை மேலாளர் பழனிவேல்ராஜன் நன்றி கூறினார்.

**மஞ்சளாறு பாசன பகுதியில் நெல்லில் களையெடுப்பு பணி தீவிரம்**

தேவதானப்பட்டி:தேவதானப்பட்டி மஞ்சளாறு பாசன பகுதியில் முதல்போக நெல் சாகுபடியில் களையெடுப்பு பணி தீவிரமாக நடந்து வருகிறது.

தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு புல்லக்காபட்டி, அட்டணம்பட்டி, டி.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, சாத்தாகோயில்பட்டி கிராமங்களில் 2 ஆயிரம் ஏக்கரில் முதல் போகநெல் சாகுபடி நடந்து வருகிறது. வழக்கத்திற்கு மாறாக அக்டோபர் மாதத்தின் முன் பகுதியில் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்ததால் அணையில் முழு கொள்ளளவான 57 அடிவரை நீர் நிரம்பியது. நவம்பர் பின்பகுதியில் முதல்போக நெல்சாகுபடிக்கு அணையில் இருந்து நீர் திறந்துவிடப்பட்டது. நெல் நடவு செய்து செய்து 40 நாட்களுக்கு மேல் ஆன நிலையில் இரண்டாம் களை எடுப்பு பணி நடக்கிறது.

விவசாயி தர்மராஜ் கூறுகையில்,""நடப்பாண்டில் தொடர்ந்து மழை பெய்ததால் அணையில் இருந்து உபரி நீர் ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடியில் பிரச்னை இல்லாமல் முழுமையாக அறுவடை செய்துவிடுவோம்,"என்றார்.

**மேட்டூர் அணை தண்ணீர் திறப்பு 12,000 கனஅடியாக அதிகரிப்பு**

மேட்டூர்: மேட்டூர் அணையிலிருந்து, டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 9,000 கனஅடி, கால்வாய் பாசனத்துக்கு, 600 கனஅடி நீர் திறக்கப்பட்டது. பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்ததால் நேற்று முன்தினம் நள்ளிரவு, டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

நேற்று அணை நீர்மட்டம், 93.530 அடியாகவும், நீர் இருப்பு, 56.799 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 495 டி.எம்.சி., நீர்வந்தது. வினாடிக்கு, 12 ஆயிரத்து,600 கனஅடி நீர் பாசனத்துக்கு திறப்பதால், நாள் ஒன்றுக்கு, ஒரு டி.எம்.சி., வீதம், அணை நீர் இருப்பு சரியும்.

**இயற்கை விதைகள் இலவச வினியோகம்**

சேலம்: இயற்கை விவசாயத்தின் தந்தை என போற்றப்படும் நம்மாழ்வாரின் நினைவு நாளையொட்டி, நேற்று, பொன்னம்மாபேட்டை அனல்மேட்டில் உள்ள கிரீன் ஹோம் இயற்கை அங்காடியின் சார்பில், இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட புடலங்காய், மிளகாய், பாகற்காய், தக்காளி, அவரை, கொத்தவரை விதைகளை, அங்காடியை சேர்ந்த செந்தில்குமார், ஈசன் எழில்விழியன் ஆகியோர், பொதுமக்களுக்கு வினியோகித்தனர். இயற்கை விதைகளை பயிர் செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்த துண்டு பிரசுரம் வழங்கினர்.

**கால்நடை பாதுகாப்பு முகாம்**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் 2016 ஜன., யில் ஏழு இடங்களில் நடத்தப்படுகிறது. கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது: திருவாடானை ஒன்றியம் நம்புதாளையில் ஜன., 5, கடம்பனேந்தலில் ஜன., 7, பரமக்குடி ஒன்றியம் பீர்க்கன்குறிச்சியில் ஜன., 6, கமுதி ஒன்றியம் எம்.புதுக்குளத்தில் ஜன., 13, அச்சன்குளத்தில் ஜன., 17, ராமநாதபுரம் ஒன்றியம் விக்கிரபாண்டிவலசையில் ஜன., 20, முதுகுளத்தூர் ஒன்றியம்மேலக்கொடுமனூரில் ஜன., 25ல் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடக்க உள்ளது. இதில் கால்நடைகளுக்கு ஆண்மை, மலடு நீக்கம், ஆப்பரேஷன், சினை பரிசோதனை, கருவூட்டல் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறந்த கன்றுகளுக்கு பரிசு வழங்கப்படும், என்றார்.

**குலை நோய் தாக்குதல் தடுக்க வழி**

நரிக்குடி வட்டாரத்தில் நெல்லில் குலை நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இந்நோயை கட்டுப்படுத் ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் ஒரு கிலோ சூடோமோனஸ் புளோரசன்ஸை கலந்து கைத் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்தலாம். சூடோமோனஸ் புளோரசன்ஸ் மருந்தினை எக்டேருக்கு 2.5 கிலோ வீதம் மணலில் கலந்து தூவலாம் என,நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் துரைக்கண்ணம்மாள் தெரிவித்துள்ளார்.

**வேளாண் செயல் திட்ட கருத்தரங்கு**

நரிக்குடி: நரிக்குடி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையில் 2016-17 ம் ஆண்டிற்கான செயல்திட்டம் பற்றிய கருத்தரங்கு கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விஞ்ஞானிகள், தொழில்நுட்பக்குழு வல்லுநர்கள், முன்னோடி விவசாயிகள் மற்றும் வேளாண் அலுவலர்கள் இடையே நடந்தது. மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் பால்பாண்டி தலைமை வகித்தார். கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி முன்னிலை வகித்தார். ராமகிருஷ்ணன், வேளாண்மை பொறியியல் துறை காஞ்சிவனம், நோயியல் துறை மாரீஸ்வரி பேசினார். நரிக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குனர் துணைக்கண்ணம்மாள் நன்றி கூறினார்.

**16 வகை பயிர்களுக்கு தேசிய காப்பீடு திட்டம்**

விருதுநகர்: ""விருதுநகர் மாவட்டத்தில் நெல்(கோடை), கம்பு உட்பட 16 வகை பயிர்களுக்கு ராபி பருவத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது," என, வேளாண் இணை இயக்குனர் கனகராசன் தெரிவித்தார்.

லஅவர் கூறியதாவது:மாவட்டத்தில் ராபி பருவத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள நெல்(கோடை), கம்பு, ராகி, சோளம், மக்காசோளம், துவரை, உளுந்து, பச்சை பயிறு, நிலக்கடலை, சூரியகாந்தி, எள்,பருத்தி, வாழை வெங்காயம், மிளகாய், கரும்பு பயிர்களுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. கம்பு, சோளம், ராகி, மக்கா சோளம்,நிலக்கடலை, எள் ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்ய ஜன.31, நெற் பயிருக்கு பிப்.29 கடைசி நாளாகும். உளுந்து, பாசி பயிறு, துவரை பயிர்களுக்கு பிப்.,15 , சூரியகாந்தி, பருத்தி, மிளகாய், வாழை,வெங்காயம் பயிர்களுக்கு ஜன.,15 கரும்பு பயிருக்கு ஜூன் 15ம் கடைசி நாளாகும்.

முன்மொழிவு படிவம்

பயிர் காப்பீடு தொகைக்கான பிரீமிய தொகையினை சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெறப்பட்டு முன் மொழிவு படிவத்துடன் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் செலுத்த வேண்டும். பயிர் கடன் பெறும் விவசாயிகள் பயிர்கடன் பெரும் வங்கியிலே இத்திட்டத்தின் வாயிலாக சேர்க்கப்படுவர். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண் துறை , கூட்டுறவு, வர்த்தக வங்கியில் பெறலாம்.

நஷ்ட ஈடு

வேளாண் துறையினரால் பயிர் அறுவடை காலத்தில் பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்பட்டு நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டு கால உத்திரவாத மகசூலோடு ஒப்பிடும் போது, நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ, அந்த விகிதப்படி காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் தொகைக்கு ஏற்ப நஷ்ட ஈடு வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு, வேளாண் விரிவாக்க மையம், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை அணுகலாம், என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## எலவனாசூர்கோட்டையில் பெங்களூரு ரோஜா செடிகள் விற்பனை

உளுந்தூர்பேட்டை, : எலவனாசூர் கோட்டையில் தொடர் மழையின் காரணமாக பூமியில் ஈரப்பதம் இருப்ப தால் பொதுமக்கள் தற்போது ரோஜா உள்ளிட்ட செடிகள், மற்றும் தேக்கு உள்ளிட்ட மரக்கன்றுகள் நடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை முன்னிட்டு பூ மற்றும் மரக்கன்றுகள் விற்பனை செய்யும் வியாபாரிகள் மொத்தமாக கன்றுகளை வாங்கி வந்து உளுந்தூர் பேட்டை பகுதியில் வியாபாரம் செய்து வருகின்றனர். இந்நிலையில் எலவனா சூர்கோட்டை - திருக்கோவிலூர் சாலை யில் உள்ள அரசு மேல் நிலைப்பள்ளி எதிரில் பெங்களூருவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள ரோஜா செடிகள் விற் பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. இது குறித்து செடிகளை விற்பனை செய்யும் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த கிருஷ்ணன் என்பவர் கூறிய போது பெங்களூருவில் இருந்து ஒரு ஜோடி ரோஜா செடி ரூ 60 முதல் ரூ100 வரையில் விற்பனை செய்து வருகிறோம். மேலும் குண்டுமல்லி, வெள்ளை சாமந்தி, செவ்வந்தி, அரும்பு உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட பூச்செடிகள், உயர்ரக மா, கொய்யா, மாதுளம் உள்ளிட்ட பழக் கன்றுகளும் விற்பனை செய்து வருகிறோம். என கூறினார். பெங்களூரு ரோஜா உள்ளிட்ட பூச்செடிகளை எலவனா சூர்கோட்டை, புகைப் பட்டி, வீரமங்கலம், கீழப் பாளையம், அரும்பலவாடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பெண்கள் மற்றும் சிறுவர்கள் வாங்கி செல்கின்றனர்.

**துறையூர் ஒழுங்குமுறை கூடத்தில் பருத்தி, வெங்காயம் கொள்முதல்**

திருச்சி, : திருச்சி மாவட்டம் துறையூர் வட்டார பகுதிகளில் விளையும் பருத்தி மற்றும் வெங்காயம் வாரந்தோறும் துறையூரில் உள்ள வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் நேரடி கொள்முதல் செய்யப்படும். வாரந்தோறும் புதன்கிழமை பருத்தியும், வெள்ளிக்கிழமை வெங்காயமும் கொள்முதல் செய்யப்படும். அந்தவகையில் வரும் ஜனவரி 6ம் தேதி பருத்தியும், 8ம் தேதி வெங்காயமும் நேரடி கொள்முதல் செய்யப்பட உள்ளது. இக்கொள்முதல் நிலையத்தில் எவ்வித தரகு, கமிஷனுமின்றி மறைமுக ஏலம் மூலம் நல்ல விலைக்கு விற்பனை செய்து விவசாய பெருமக்கள் பயன்பெறலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**திருச்செந்துறையில் 879 வாழைத்தார் ஏலம்**

திருச்சி, : திருச்செந்துறை கிராமத்தில் அமைந்துள்ள வாழை வணிக வளாகத்தில் நேற்று 879 வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டது. சிறுகாம்பூர், மஞ்சகோரை, திருவையாறு, எட்டரை, நெய்வேலி ஆகிய கிராமங்களிலிருந்து 7 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். திண்டுக்கல், பழனி, கரியமாணிக்கம், சேத்லாபட்டி, குளித்தலை, ஜீயபுரம், திருச்சி கே.கே.நகர், அண்ணாநகர், சீத்தலைவாய் ஆகிய ஊர்களிலிருந்து மொத்தம் 17 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். ரூ.31,450 மதிப்பிற்கு ஏலம் நடைபெற்றது. அதிகபட்சமாக பூவன் ரூ.115, கற்பூரவள்ளி ரூ.70, பச்சலாடன் ரூ.85க்கு ஏலம் போனது. அடுத்த ஏலம் வரும் ஜனவரி 5ம் ே◌ததி நடக்கிறது.

**பெரம்பலூர் விற்பனை கூடத்தில் ஜனவரி 7 முதல் பருத்தி ஏலம்**

பெரம்பலூர், : கடந்தஆண்டு பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தாங்கள் பயிர்செய்த பருத்தி யினை பெரம்பலூர் மாவட்டம், வடக்குமாதவி சாலையிலுள்ள ஒழுங்குமுறை விற்ப னைக் கூடத்திற்கு அதிகஅளவில் கொண்டுவந்து விற்பனைசெய்து உரியவிலையும் அதன்மூலம் கூடுதல் வருமானமும் பெற்றனர். அதேபோல் இந்தஆண்டு பருத்திஏல விற்பனை வருகிற 7ம்தேதி வியாழக்கிழமைமுதல் தொடங்குகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் இந்தஆண்டு பருத்தி 20,300ஹெக்டரில் சாகுபடிசெய் யப்பட்டுள்ளது. தற்பொழுது அறுவடைதொடங்கி நடந்துவருகிறது.எனவே விவசாயிகள் தங்களது பருத்தியினை பெரம்பலூரிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவந்து விற்பனைசெய்து பயன்பெற வேண்டும். ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட வியாபாரிகளும் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் வயலில் பருத்தி எடுக்கும்பொழுதே நன்குவெடித்து மலர்ந்த, தூசி சருகு இல்லாத தூய்மையான வெண்மையான பருத்தியை தனிக்கூடையிலும், நிறம் மாறிய பருத்தியினை வேறொரு கூடையிலும் தனித்தனியாகப்பிரித்து சேகரிக்க வேண்டும். சேகரித்த பருத்தியினை ஈரப்பதம் 8க்கு குறைவாக இருக்கும் வகையில் நிழலில் நன்கு உலர்த்தி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவர வேண்டும்.கிராமப்புறங்களில் தனியாரிடம் விற்பனை செய்யும்போது எடையில் ஏற்படும் குளறுபடிகளை முற்றிலும் தவிர்த்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் சரியான எடையும், மறைமுக ஏலத்தில் போட்டிமூலம் அதிகவிலையும் பெறமுடியும். எனவே விவசா யிகள் அறுவடைசெய்யும் பருத்தியை ஒழங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்து நல்லவிலைக்கு விற்பனைசெய்து

பயன்பெற வேண்டுமென மாவட்ட நிர்வாகத் தின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிறு குறு விவசாயிகளுக்கு சிறுதானிய தொழில்நுட்ப பயிற்சி**

அன்னவாசல், : அன்னவாசல் அருகே சிறு குறு விவசாயிகளுக்கு சிறு தானியத்தில் அறுவடைக்கு முன், பின் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது. அன்னவாசல் அருகே கீழக்குறிச்சியில் ஜீ.வி.என். அறக்கட்டளையும் நபார்டு வங்கியும் இணைந்து நடத்திய இந்த பயிற்சியில் அறக்கட்டளை இயக்குனர் சுப்பிரமணியன் பேசுகையில், நபார்டு வங்கி திட்டத்தின் மூலம் 2 ஆண்டுகளில் சிறுகுறு தானியங்களில் 100 விவசாயிகளை 100 ஏக்கர் நிலத்தில் சிறு தானியத்தை உற்பத்தி செய்ய வைக்கிறது. முதல் ஆண்டில் அன்னவாசல் குன்னாண்டார்கோவில் ஒன்றியத்தில் 50 விவசாயிகளுக்கு 50 ஏக்கர் நிலத்தில் சிறுதானிய உற்பத்தி செய்ய விதை இடு பொருட்கள் மற்றும் பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு 50 ஏக்கர் நிலத்தில் 50 விவசாயிகள் இருவட்டாரங்களிலும் விதை கொடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது என திட்டம் பற்றி விளக்கினார். பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் லலிதா, குடும்ப நிறுவன பங்கயவள்ளி, தாயினிப்பட்டி கோவிந்தராசு, இயற்கை விவசாய பயிற்றுனர் காமராஜ், வானகம் சிறு தானிய பயிற்றுனர் மருதையப்பன் ஆகியோர் பயிற்றுனர்களாகவும், கருத்தாளர்களாகவும் கலந்துகொண்டு சிறு தானிய உற்பத்தியில் அறுவடைக்கு முன்பின் உள்ள தொழில்நுட்பங்களையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கினர். மேலும் விதை நேர்த்தி நோய் கட்டுப்பாடு மண் பரிசோதனையின் அவசியம், பஞ்சகாவ்யம், மீன் அமிலம், இன கவர்ச்சி பொறி, முட்டை அமிலம் தேமோரி கரைசல், விதை பாதுகாப்பு, விதை வங்கிகள் உருவாக்குதல் தொடர்பாகவும் பயிற்சி அளிக்கப்பட்டது. முன்னோடி இயற்கை விவசாயிகள் காளிமுத்து, சின்னதுரை ஆகியோர் கலந்து

கொண்டு சிறுதானிய உற்பத்தியில் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இப்பயிற்சியில் 50 பயனாளிகள் பங்கேற்றனர். பயிற்சி 28, 29 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது. பயிற்சி முடிவில் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் தனபாக்கியம் நன்றி கூறினார்.

**நுண்ணீர் பாசன பயிற்சி**

திருக்காட்டுப்பள்ளி, : பூதலூர் வட்டார விவசாயிகளுக்கு ஆர்விஎஸ் வேளாண்மை கல்லூரியில் நுண்ணீர் பாசன பராமரிப்பு குறித்த சிறப்பு பயிற்சி கல்லூரி முதல்வர் சோழன் தலைமையில் நடந்தது. உதவிப் பேராசிரியர் முனைவர். வினோத்குமார் முன்னிலை வகித்தார். இதில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். நுண்ணீர் பாசனம் அமைப்பதின் நோக்கம், சொட்டு நீர் பாசன தொழில் நுட்பங்கள் குறித்த செயல் முறைகள், படக்காட்சிகள் மூலம் விளக்கப்பட்டது. பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரபாகர், அலுவலர்கள் உமாமகேஸ்வரி, ஆரோக்யசாமி, வளையாபதி, வசந்த் கலந்து கொண்டனர்.